இன்றைய செய்தி நாளைய வரலாறு

முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

புதன்கிழமை 11.02.2026

# ஆசையாய் பாராட்டிய அரசு ஊழியர்கள்!

அன்பாய், ஆசையாய் விழா எடுத்து மாண்புமிகு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களைப் பாராட்டி இருக்கிறார்கள் அரசு ஊழியர்கள்.

அரசு ஊழியர்களின் 23 ஆண்டு காலக் கோரிக்கையை மட்டுமல்ல; அவர்களது பல்வேறு கோரிக்கைகளை, விருப்பங்களை கடந்த ஐந்தாண்டு காலத்தில் நிறைவேற்றி 'அரசு ஊழியர்களின் அரசு இது' என்பதை மெய்ப்பித்து வருகிறார் மாண்புமிகு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள். அவருக்கு சென்னையில் மாபெரும் நன்றி அறிவிப்பு மாநாட்டை அனைத்து அரசு ஊழியர் சங்கங்களின் கூட்ட மைப்பானது நடத்திக் காட்டியது.

**'எனக்கு நன்றி தெரிவித்து என்னை உங்களிடம் இருந்து வேறுபடுத்தி விடாதீர்கள்' என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்னபோது அரங்கமே மகிழ்ச்சியால் அதிர்ந்தது. 'அமைச்சரவையும் நீங்களும் சேர்ந் தால்தான் அரசாங்கம். ஒரு நாணயத்தின் இரு பக்கங்கள் நாம். தமிழ் நாடு அரசின் அனைத்துத் திட்டங்களையும் மக்களிடம் கொண்டு சேர்த்து இந்த ஆட்சிக்கு நல்ல பெயர் ஏற்படுத்தித் தந்தவர்களே தாங்கள்தான். எனவே உங்களுக்கு நான் நன்றி தெரிவிக்கிறேன்'** என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்னபோது மகிழ்ச்சியால், நிறைந்து போனார்கள் அங்கு கூடியிருந்த பல்லாயிரக்கணக்கான அரசு ஊழியர் கள், ஆசிரியர்கள். மாநாட்டில் உரையாற்றிய அரசு ஊழியர் அமைப்பின் தலைவர்கள் அனைவரும், முதலமைச்சரை மனமாரப் பாராட்டினார்கள்.

ஜாக்டோ - ஜியோ அமைப்பின் மாநில ஒருங்கிணைப்பாளர் தாஸ் பேசும் போது, **"அரசு ஊழியர்களுக்காகக் கொண்டு வரப்பட்ட இந்த மகத்தான ஓய்வூதியத் திட்டத்தின் மூலம், ஒரு தலைமுறை அல்ல அல்ல; ஏழேழு தலைமுறை அரசுப் பணியாளர்கள் திராவிட முன்னேற்றக் கழக அரசுக்கு கடமைப்பட்டவர்களாக உள்ளனர். நாங்கள் போராட்டத்தில் ஈடுபட்ட அந்தக் காலத்தில், 'நான் இருக்கிறேன், நீங்கள் கவலைப்பட வேண்டாம்' என்று துணையாக நின்று உறுதிஅளித்தவர்தான் இன்றைய முதலமைச்சர். நமது ஆட்சி வந்தால் கோரிக்கைகள் நிறைவேற்றப்படும் என்று அவர் அளித்த வாக்குறுதியைப் போலவே இன்று அதனை நடைமுறையில் நிறைவேற்றித் தந்துள்ளார். இதுவே தாயுள்ளம் படைத்த தலைவரின் அடையாளம்"** என்று உள்ளத்தில் இருந்து பாராட்டினார்.

"பத்து லட்சம் குடும்பங்களின் நெஞ்சில் முதலமைச்சர் நிறைந்துள் ளார். பேசாமலேயே செயலில் காட்டி உள்ளார். பொதுவாக குழு போட்டு, கிடப்பில் போடுவார்கள். ஆனால் குழு போட்டு உயிர் கொடுத்த முதல மைச்சர் இவர் தான்" என்று தாஸ் குறிப்பிட்டார். தமிழ்நாடு ஜாக்டோ - ஜியோ அமைப்பின் தலைவரே தமிழ்நாடு முதலமைச்சர் தான் என்றும் மகுடம் சூட்டினார்.

ஜாக்டோ - ஜியோ அமைப்பின் மாநில ஒருங்கிணைப்பாளர் தியாக ராஜன் பேசும் போது, "2006 ஆம் ஆண்டு ஆசிரியர்களுக்கு எத்த னையோ திட்டங்களை அறிவித்தவர் கலைஞர் அவர்கள். அந்த வழியில் 2026 ஆம் ஆண்டு அரசு ஊழியர்களுக்கான திட்டங்களை அறிவித் துள்ளார் இன்றைய முதலமைச்சர். பழைய ஓய்வூதியத் திட்டத்தை எடுத் தது முந்தைய அ.தி.மு.க. அரசு. மீண்டும் தி.மு.க. அரசு தான் வரும். இன்னும் பல திட்டங்களை இந்த முதலமைச்சர் தான் செய்து தருவார்" என்று குறிப்பிட்டார்.

"தமிழ்நாடு உறுதியளிக்கப்பட்ட ஓய்வூதியத் திட்டம் (Tamil Nadu Assured Pension Scheme - TAPS)" என்ற புதிய திட்டத்தை முதலமைச்சர் மாண்புமிகு மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்தார்கள். இது அரசு ஊழியர்களின் 23 ஆண்டு காலக் கோரிக்கை ஆகும். இதனைச் செயல் படுத்த முடியாது, இதனால் தி.மு.க. அரசுக்கு அரசு ஊழியர்கள் மத்தியில் கெட்ட பேர் ஏற்படும் என்று எதிர்க்கட்சித் தலைவர் பழனிசாமி நினைத்தார். அவதூறுகள் செய்தார். அவரது எண்ணத்தில் மண் விழும் வகையில் புதிய திட்டத்தைக் கொடுத்தார் முதலமைச்சர்.

இதனை அறிவித்த பிறகும் அரசு ஊழியர்கள் மத்தியில் தவறான புரிதலை ஏற்படுத்த, குழப்பத்தை ஏற்படுத்தப் பார்த்தார் பழனிசாமி. ஆனால் அவர்கள் தெளிவாக இருக்கிறார்கள்.

இந்த ஓய்வூதியத் திட்டம் எவ்வளவு சிறப்பானது என்பதை தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் வெ.சோமசுந்தரம் அவர்கள், 'தீக்கதிர்' நாளேட்டுக்கு அளித்துள்ள பேட்டியில் தெளிவாக உள்ளது.

* உறுதியளிக்கப்பட்ட பென்சன் திட்டம் போராட்டக் களத்தில் ஒரு மைல் கல் என்றும் -
* 23 ஆண்டு காலப் போராட்டத்தில் இது மிக முக்கியமான முன்னேற்றம் என்றும் -
* ஒன்றிய அரசின் திட்டத்தில் கூட உத்தரவாதம் இல்லை, தமிழ்நாடு அரசின் திட்டத்தில்தான் முழுமையான அரசு உத்தரவாதம் இருக்கிறது என்றும் -
* 20 ஆண்டுகளுக்கும் மேலாக மறுக்கப்பட்ட பணிக்கொடை இப்போது கிடைத்திருக்கிறது என்றும் -
* பா.ஜ.க. ஆளும் எந்த மாநிலமும் பழைய பென்சன் திட்டத்தைக் கொண்டு வரவில்லை என்றும் -
* ஓய்வுக் காலத்தில் நிம்மதியான பென்சன் கிடைப்பதற்கான வாசல் திறந்திருக்கிறது என்றும் -

அவர் பேட்டி அளித்துள்ளார்.

இதைவிட அரசுக்கு கிடைக்கும் பாராட்டு வேறு இருக்க முடியாது. அதிலும் ஒன்றிய பா.ஜ.க. அரசு தரும் குடைச்சல்களுக்கு மத்தியில் இவை செய்து தரப்பட்டுள்ளன.

**மாண்புமிகு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் மிகச் சரியாகச் செயல்பட்டு உள்ளார் என்பதை அரசு ஊழியர்கள் கூட்டமைப்பு எடுத்த நன்றி தெரிவிக்கும் மாநாடு நாட்டுக்கு அறிவித்துள்ளது.**

**அரசு ஊழியர்கள் உள்ளிட்ட அனைவருக்குமான அரசு இது!**



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (9.02.2026) நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை சார்பில் திருவள்ளூர் மாவட்டம், போளிவாக்கம் ஊராட்சியில் நடைபெற்ற நிகழ்ச்சியில், தூய்மைப் பணியாளர்களுக்கு உணவு வழங்கும் திட்டத்தை மாநகராட்சிகள், நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளில் பணியாற்றும் தூய்மைப் பணியாளர்களுக்கும் விரிவுப்படுத்தி தொடங்கி வைத்து, வெப்பக் காப்புப் பையில் (Insulated Thermal Carrying Bag) வைக்கப்பட்ட உணவுக் கலன்களை தூய்மைப் பணியாளர்களுக்கு வழங்கினார். இந்த விழாவில், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர்கள் கே.என்.நேரு, எஸ்.எம்.நாசர், மருத்துவர் மா.மதிவேந்தன், எஸ்.ஜெகத்ரட்சகன் எம்.பி., சட்டமன்ற உறுப்பினர்கள் எஸ். சந்திரன், வி.ஜி.ராஜேந்திரன், டி.ஜெ.கோவிந்தராஜன், சுதர்சனம், கிருஷ்ணசாமி, கணபதி, துரை சந்திரசேகர், தூய்மைப் பணியாளர் நல வாரியத்தின் தலைவர் டாக்டர் திப்பம்பட்டி ஆறுச்சாமி மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (9.02.2026) நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை சார்பில் திருவள்ளூர் மாவட்டம், போளிவாக்கம் ஊராட்சியில் நடைபெற்ற நிகழ்ச்சியில், தூய்மைப் பணியாளர்களுக்கு உணவு வழங்கும் திட்டத்தை மாநகராட்சிகள், நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளில் பணியாற்றும் தூய்மைப் பணியாளர்களுக்கும் விரிவுப்படுத்தி தொடங்கி வைத்து, தூய்மைப் பணியாளர்களுக்கு பல்வேறு நலத்திட்ட உதவிகளையும் வழங்கினார். இந்த விழாவில், அமைச்சர்கள் கே.என்.நேரு, எஸ்.எம்.நாசர், மருத்துவர் மா.மதிவேந்தன், எஸ்.ஜெகத்ரட்சகன் எம்.பி., சட்டமன்ற உறுப்பினர்கள் எஸ். சந்திரன், வி.ஜி.ராஜேந்திரன், டி.ஜெ.கோவிந்தராஜன், சுதர்சனம், கிருஷ்ணசாமி, கணபதி, துரை சந்திரசேகர், தூய்மைப் பணியாளர் நல வாரியத்தின் தலைவர் டாக்டர் திப்பம்பட்டி ஆறுச்சாமி மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### தமிழ்நாட்டை வஞ்சிக்கும் பா.ஜ.க. அரசையும், துணை போகும் அ.தி.மு.க.வையும் கண்டித்து

# திருவண்ணாமலையில் பிப். 12 அன்று மாபெரும் ஆர்ப்பாட்டம்!

### மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி இயக்க நிர்வாகிகள் பங்கேற்று முழக்கம்!

*திருவண்ணாமலை, பிப். 11 -*

திருவண்ணாமலை மாநகர மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி சார்பில், ஒன்றிய நிதிநிலை அறிக்கையில் தமிழ்நாட்டை வஞ்சித்த பா.ஜ.க. அரசையும், அதற்கு துணை போகும் அ.தி.மு.க.வைக் கண்டித்து மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறவுள்ளது.

நாளை (12.2.2026 - வியாழக்கிழமை) காலை 9.00 மணிக்கு திருவண்ணாமலை மாநகர மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி சார்பில், திருவண்ணாமலை, அண்ணா சிலை அருகில், ஒன்றிய நிதிநிலை அறிக்கையில் தமிழ்நாட்டை வஞ்சித்த பா.ஜ.க. அரசையும், அதற்கு துணை போகும் அ.தி.மு.க.வைக் கண்டித்து மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறவுள்ளது.

கண்டன ஆர்பாட்டத்திற்கு மாவட்ட தி.மு.க. அவைத் தலைவர் கோ.கண்ணன் தலைமை வகிக்கிறார்.

கழக மருத்துவ அணி துணைத் தலைவர் டாக்டர் எ.வ.வே.கம்பன், நாடாளு மன்ற உறுப்பினர் சி.என். அண்ணாதுரை, மாவட்ட காங்கிரஸ் கமிட்டி தலைவர் கே.குணசேகரன், திராவிடர் கழகம் சி.மூர்த்தி, மறுமலர்ச்சி திமுக சீனி.கார்த்திகேயன், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி ப.செல்வம், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி இரா.திருமலை, விடுதலைச் சிறுத்தைகள் சி.நியூட்டன், பி.கா.அம்பேத்வளவன், முஸ்லீம் லீக் ஜ.எம்.சுலைமான், மனிதநேய மக்கள் கட்சி நாசர் உசேன், மக்கள் நீதி மையம் இரா.அருள், தமிழக வாழ்வுரிமை கட்சி கா.கண்ணதாசன், மல்லி வினோத், பா.ராஜசேகர், மனிதநேய ஜனநாயக கட்சி கேட் குமார் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

கண்டன ஆர்ப்பாட்டத்தில் தலைமைச் செயற்குழு உறுப்பினர் இரா.ஸ்ரீதரன், மாநில பொறியாளர் அணி செயலாளர் கு.கருணாநிதி, தலைமைச் செயற்குழு உறுப்பினர் பொன்.முத்து, மாவட்டப் பொருளாளர் எஸ்.பன்னீர்செல்வம், மாவட்ட துணைச் செயலாளர்கள் பிரியா ப.விஜயரங்கன், விஜயலட்சுமி ரமேஷ்,

மாநகரச் செயலாளர் ப.கார்த்திவேல்மாறன், பகுதிப் பொறுப்பாளர்கள் விஜி (எ) சு.விஜியராஜ், அ. கோவிந்தன், ந.சீனுவாசன், குட்டி க.புகழேந்தி, சி.சண்முகம், பா.ஷெரீப், மாநகர மேயர் நிர்மலாவேல்மாறன்,

காங்கிரஸ் டாக்டர் வெற்றிசெல்வன், ம.தி.மு.க. பாசறை பாபு, கிருஷ்ணமூர்த்தி, நாதன், மார்ச்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி பன்னீர் செல்வம், இராமதாஸ், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி கே. வெங்கடேசன், சு.ஆனந்த குமார், விடுதலை சிறுத்தைகள் மா.ரவி, தேவேந்திரன், இந்திய யூனியன் முஸ்லீம் லீக் முகமது அனிபா, ஜெ. அனிப், மக்கள் நீதி மய்யம் ஏ.ஆர்.வெங்கடேஷ், எம். ஆர்.குமார், மனிதநேய மக்கள் கட்சி எம்.கலிமுல்லா, கே.அன்சர், தமிழக வாழ்வுரிமைக் கட்சி த.விஜய், காபிரியேல் உட்பட மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணியின் மாவட்ட, மாநகர, கிளை, வட்டக் கழக நிர்வாகிகள் அணி சார்ந்த அமைப்பின் நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்பின் பிரதிநிதிகள் மற்றும் பொதுமக்கள் ஆகியோர் கலந்து கொள்கிறார்கள்.

கண்டன ஆர்ப்பாட்டத்தை திருவண்ணாமலை மாநகர மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணியினர் செய்து வருகின்றனர்.

# கேள்விக் கென்ன பதில் ?

**பாமரன்:** "3 குழந்தைகளைப் பெற்றுக் கொள்ளுங்கள்" என்று ஆர்.எஸ்.எஸ். தலைவர் மோகன் பகவத் அறிவுரை வழங்கி இருக்கிறாரே ?

**பதில்: 'நாம் இருவர் நமக்கு ஒருவர்', 'நாம் இருவர் நமக்கு இருவர்' என்ற கருத்துகளெல்லாம் மறைந்து, 'நாம் இருவர் நமக்கு மூவர்' என்ற புதிய கோஷத்தை இப்போது மோகன் பகவத் வழங்கி இருக்கிறார்.**

**" மத மாற்றம் மற்றும் ஊடுருவல் ஆகியவை மக்கள் தொகையில் சம நிலையற்ற தன்மையை ஏற்படுத்தி உள்ளன" என்று வேறு கூறியிருக்கிறார்.**

**மோகன் பகவத், "3 குழந்தைகளைப் பெற்றுக் கொள்ளுங்கள்" என்று இந்துக்களுக்காகவே சொல்லியிருக்கிறார், மற்ற மதத்தினருக்காக அல்ல என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும்!**



கள்ளக்குறிச்சி மாவட்டம், திருக்கோவிலூர் வட்டம், ரிஷிவந்தியம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட கூவனூர் கிராமத்தில் கூவனூர் சாங்கியம், பிள்ளையார் பாளையம் கிராமங்களை இணைக்கும் வகையில் தென் பெண்ணை ஆற்றின் குறுக்கே நபார்டு மற்றும் கிராமச்சாலைகள் அலகு சார்பில் ரூ.25.20 கோடி மதிப்பீட்டில் புதியதாகக் கட்டப்பட்டுள்ள உயர்மட்டப் பாலத்தினை பொதுப் பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு திறந்து வைத்தார். உடன் மாவட்ட ஆட்சித் தலைவர் எம்.எஸ். பிரசாந்த், வசந்தம் க.கார்த்திகேயன் எம்.எல்.ஏ., தா.உதயசூரியன் எம்.எல்.ஏ., தே.மலையரசன் எம்.பி. ஆகியோர் உள்ளனர்.